**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 02 கட்டிடங்களுக்கு மூன்று சுற்று மின்சார இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 4,098,592 பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 | மின்சார சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட மின்சார சுற்று முறைமை மின்சார சபைக்குச் சொந்தமான சொத்தாக இருந்தமையால் அதற்காக செலுத்தப்பட்ட | பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| இன் 22 ஆம் பந்திக்கு முரணாக அந்த ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட வழுவை மீளாய்வாண்டின் போது பிற்போட்ட ரீதியில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைக் கட்டணம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உயர் கல்வி நுழைவினை அதிகரிக்கும் செயற்திட்டத்தின் (AHEAD) கட்டிடம் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மற்றும் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய செலவினங்களைச் செலுத்துவதற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 241,336,414 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பட்டப்பின் படிப்பு பாடநெறி, சம்பளம் மற்றும் படிகள், கட்டிடம் மற்றும் ஆய்வுகூட செலவினங்களை உள்ளடக்கிய சகல செலவினங்களும் AHEAD செயற்திட்டத்தின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | பல்கலைக்ககழகத்தின் சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய மாணவர் வருமானம் சரியாக இனங்காணப்படாமல் மாணவர் வருமான கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும், இனங்காணப்படாத மாணவர் வருமானக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 801,136,623 வேறுபாடு கிடைக்க வேண்டிய மாணவர் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காலப் பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | OMIS கணனி முறைமையில் காணப்படுகின்ற வசதியினத்தின் காரணமாக மாணவர் வருமானத்திற்கு உரிய சரியான காலப்பகுப்பாய்வு பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது. புதிய கணனி முறைமையின் மூலம் அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மாணவர் வருமானத்தை சரியான இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும், காலப் பகுப்பாய்வை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 13,382,583 ஆன கற்பனைச் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து | E- books மற்றும் மென்பொருள் (Software) பயன்தரு ஆயுட்காலம் எதிர்வுகூற முடியாதிருந்தமையால் அந்த சொத்துக்கள் நிச்சயமற்ற ஆயுட் | கற்பனைச் சொத்துக்களை பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக நியாயமான |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டு வரை பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலம் உள்ள கற்பனைச் சொத்தாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடொன்றை மேற்கொண்டு பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கற்கை உபகரணங்கள் (Course Materials) இருப்பின் பெறுமதி ரூபா 123,405,203 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இருப்பு மெய்மையாய்வு சபையினால் கற்கை உபகரணங்களின் இருப்பு கிரயத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த செலவினத்தைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதி இருப்பு பெறுமதி சரியான இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் களஞ்சியத் திற்கு கிடைக்கப்பெற்ற கிரயம் ரூபா 5,976,835 ஆன காகிதாதிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 திசம்பர் மாத இறுதியின் போது காகிதாதிகள் மற்றும் கணனி துணைப்பாக இருப்பொன்று களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அதற்குரிய பட்டியல்கள் 2024 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்றமையால் அவை 2024 ஆம் ஆண்டின் போது பொருட் பதிவேடுகளில் இடப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 27,962,527 மீளாய்வாண்டின் செலவினங்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 30,282,945 தொகை 2022 ஆம் ஆண்டில் செலவினத்தில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசம்பர் 31 | 2022 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறு செலவினத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது அந்த செலவினங்கள் அட்டுறு செலவினக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக உரிய செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை சரி செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் உரிய செலவினக் கணக்கில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்காக தேவையான எழுத்து மூல சான்றுகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 191,982,135 ஆன அட்டுறு செலவின மீதிக்காக காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெறுமதி சேர் வரி (VAT) பட்டியல் சமர்ப்பிக்காத ஒப்பந்தகாரருக்கும், வழங்குநருக்கும் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி (VAT) செலவினமாக கூட்டுமொத்தமாக ரூபா 14,023,270 கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக செலுத்த வேண்டிய வரிப் பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செல்லுபடியான வட் வரி ஓய்வு பெறல் சான்றிதழ் சமர்ப்பிக்காதிருந்த வழங்குநரிடமிருந்து வட் வரி தொகையை அந்த ஓய்வு பெறல் சான்றிதழ் கிடைக்கும் வரை நிறுத்தி வைப்பதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. | உரிய கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது வட் பட்டியல் சமர்ப்பிக்காத வழங்குநருக்கு வட் வரி செலுத்தாதிருத்தல் வேண்டும். |
| (ஏ) | 34 ஏக்கர் நிலப் பகுதியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற உள்ளக வீதி முறைமைகள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீடு அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற உள்ளக வீதி முறைமைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு அந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது என நம்புகின்றோம். | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளக வீதி முறைமையை உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனியாகக் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2019 திசம்பர் முதல் 2023 யூன் வரை Curriculum Development on Europe Sri Lanka Capacity Building in Energy Circular Economy மூலம் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 175,405,241 மற்றும் அதில் ஏற்பட்ட செலவினம் என்பன | ERASMUS+CBHE செயற்திட்டம் பல்கலைக்கழகத்தின் கணக்குகளுக்கு புறம்பாக தனிப்பட்ட ரீதியில் அமுல்படுத்துகின்ற செயற்திட்டமாக இருந்தமையால் அந்த செயற்திட்டத்தின் வங்கி கணக்கு மீதி பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப் | பல்கலைக்கழகத்தின் சகல வருமானம் மற்றும் செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் மேவுகை செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | படுத்துவதற்கு எந்தவொரு தேவையும் ஏற்படவில்லை. | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ), 9(2)(ஊ) மற்றும் 10(5)(1) பிரிவுகள் | உரிய அமைச்சரினதும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தால் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 2,238,763,138 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரத்தை பெறும் வரை குறுங்கால முதலீடுகள் தாமதமடைந்தமையினால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த சந்தர்ப்பங்களின் போது திறைசேரி அங்கீகாரம் கோரி கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 102, 103, 104 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை, 2023 மே 16 ஆந் திகதிய PED/01/2021(i) என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 39,122,656 ஆன இழப்புக்கள் மற்றும் காலாவதியான கல்விசார் உபகரணங்கள் பொருட்கள் (Course Materials) திறைசேரி அங்கீகாரம் இன்றி பல்கலைக்கழ நிருவாக சபையினால் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தால் வருடாந்தம் பதிவு செய்யப்படுகின்ற மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு கல்வி வெளியீடுகள் அச்சிடப் படுகின்றன. எனினும் கல்வி ஆண்டிற்கு இடையிலே மாணவர்களினால் பாடநெறிகளை விட்டுச் செல்லல், பாடப் பரிந்துரைகள் மாற்றமடைதல் போன்ற விடயங்களின் காரணமாக சில நேரம் அச்சிடப்பட்ட புத்தகங்களை அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கல்வி சார் வெளியீடுகளை அச்சிடும் போது நட்டத்தைக் குறைக்கும் வகையில் செலவினங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 570, 571 மற்றும் 572 | கூட்டுப்பெறுமதி ரூபா 55,295,904 ஆன காலாவதியான நிறுத்திவைத்தல், கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அச்சிடலின் வேலைகளுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற ரூபா 1,204,594 தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி காப்புறுதி இயலுமான வரை விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படுவதுடன் அச்சிடலில் உள்ள உரிய வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளமையால் அந்த வருமானத்தை இந்த ஆண்டின் போது பகிர்ந்தளிக்கக் கூடிய வகையில் விரைவாக கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | பெறுமதி ரூபா 332,601,124 ஆன நூலக புத்தக இருப்பு மற்றும் கிரயம் ரூபா 85,538,631 ஆன 27 பிரதேச நிலையங்களின் பாடநெறிப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய இருப்புக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.5 மற்றும் 2020 மார்ச் 25 ஆம் திகதிய மேலதிகம் 35 | திணைக்கள பெறுகைக் குழு (சிறிய) எல்லையை விஞ்சிவதை தடுக்கும் நோகில் கூட்டுமொத்தமாக ரூபா 182,544,563 ஆன கட்டடத்தை நவீனமாக்கும் 03 பெறுகைப் பணிகள் 02 கட்டங்கள் மற்றும் 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ஒரே கால எல்லையில் ஆரம்பிக்கப்பட்டு பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 சனவரி 31 ஆம் திகதிய இலக்கம் 02/2013 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | திறைசேரி அங்கீகாரம் ஆகக் கூடியது ரூபா 500,000 ஆன கடன் அட்டை (Credit Card) 2021 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு | திறைசேரி அங்கீகாரத்திற்காக தற்போது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (உ) | 1978 திசம்பர் 19 ஆம் திகதி இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கை | 2023 திசம்பர் 31 அல் உள்ளவாறு கிரயம் ரூபா 2,043,340,394 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் 18,780,970 ஆன கற்பசைன் சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | OMIS கணனி முறைமையில் நிலையான சொத்து மொடியூல்களை சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2018 நவம்பர் 26 ஆம திகதி இலக்கம 15/2018 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தால் திறைசேரி அங்கீகாரம் இன்றி 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் நிதியம் மற்றும் ஊளியர் பங்களிப்பாகவும் முறையே ரூபா 44,000,000 மற்றும் ரூபா 39,872,693 பயன்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்தில் இஸ்தாபிக்கப்பட்ட காப்புறுதி திட்டத்திற்காக செலுத்த வேண்டிய காப்புறுதி கணக்கொன்று ஊடாக உள்ளக ரீதியல் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்ரையின் அடிப்படையில் ளியர் காப்பறுதி விண்ணப்பத்திற்காக ரூபா 82,511,730 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக சட்டம், ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 718 இன் பிரகாரம் திறந்த பல்கலைக்கழகத்தில் மருத்துவ நலன்புரி உத்தேச திட்டம் ஒன்று உழைக்கின்ற வருமானம் மற்றும் சேவை ஊழியர் பங்களிப்பு நிதியம் ஒன்றுடன் பேணிச் செல்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனை பிரகாரம் பேணிச் செல்லப்படுகின்றது. | காப்புறுதி முன்மொழிவு திட்டததிற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனத்திற்கான தாபன விதிக் கோவை V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பிரிவு | 1989 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் பிணை முறி உடன்படிக்கைகளை மீறிய 39 உத்தியோகத்தர்களிடமிருந் து அறவிடவேண்டிய ரூபா 177,019,582 கூட்டுத் தொகையானது 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 06 உத்தியோகத்தர்களுக்கு வழக்கு தொடரப்டுள்ளது. அவ்வாறே முகவரி கண்டறிய முடியாத 12 உத்தியோகத்தர்களும் தவணையாக அறவிடப்படுகின்ற 07 உத்தியோகத்தர்களும் பிணைமுறி மீறி பத்து வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர்களும் தொடர்பாக மிகுதி | பிணைமுறியை மீறியதன் காரணமாக அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றது. | |
| (ஏ) | 2023 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் BD/HRD/126/214/19/2023 என்ற திறைசேரி செயயலாளரின் கடிதத்தின் 05 ஆம் பந்தி | பிணைமுறி மற்றும் உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக மீளாய்வாணடில் அறவிடப்பட்ட ரூபா 26,187,720 திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 737 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பல்களைக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX அத்தியாயம் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய இலக்கம் 10/2017 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | கல்விசார் பதவி அணியினரில் 347 உத்தியோகத்தர்களிடமிருந்து வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,734,782,688 செலுத்தப்பட்டிருந்தது. | தாபனவிதிக் கோவை மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கல்விசார் பதவியணியினரின் வருகை வெளிச் செல்கை குறிப்பிடப்படவில்லை. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய இலக்கம் SC&PMU/Grant/20 என்ற வெளிநாட்டு வளங்கள் திணைக்கள சுற்றறிக்கை | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வழிகாட்டல் மற்றும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ளாமல் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆராய்சிகளுக்காக ரூபா 25,719,472 தொகையான 05 வெளிநாட்டு மானியங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு மானியம் ரூபா 193,888,967 தனிநபர்களிடமிருந்தும் நிறுவனங்களின் மூலமும் | அந்த வெளிநாட்டு நிறுவனம் மற்றும் விரிவுரையாளர்களுக்கிடையே நிதியத்தை மாற்றும் போது இடையிலுள்ள நிறுவனமொன்றாக மாத்திரம் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதனால் குறிப்பிடப்படடுள்ள சுற்றறிக்கையின் விடயப் பரப்புக்கு அவை உரித்தாக இல்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக கிடைத்திருந்தது. | | |
| (ஓ) | 2020 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய இலக்கம் 02/2014 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 04 (III) ஆம் பந்தி | குறித்துரைத்த ஆராய்ச்சி மேற்பார்வை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்தக் குழுவின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளாமல் இறுதி ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மனிதவள, சமூக விஞ்ஞான பீடத்தில் முறையே 113 உத்தியோகத்தர்களுக்கும், 281 உத்தியோகத்தர்களுக்கும் 2018 – 2022 காலத்தில் ஆராய்ச்சிப் படி செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 753,979,584 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 617,359,771 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 136,619,813 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மானியம், மாணவர் வருமானம் மற்றும் குறுங்கால பாடநெறி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பல்கலைக் கழகத்தின் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் கல்விசார் பதவியணியினருக்காக 129 பேர்கள், கல்விசாரா பதவியணியினருக்காக 269 பேர்கள் சேர்க்கப்பட்டு | அரசாங்கத்தால் தற்காலிகமாக பதவியணியினரைச் சேர்த்தல்களைக் கைவிடுதலுடன் திறந்த பல்கலைக்கழகத்தின் நாளாந்த கல்வி மற்றும் நிருவாக நடவடிக்கைகளை இடையூறின்றி நடாத்திச் செல்வதற்காக கல்விசார் | பதவியணியினரை சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 137,402,969 படியாக செலுத்தப் பட்டிருந்தது. மேலும் தற்காலிக அடிப்படையில் கல்விசார் பதவியணி யினருக்காக 21 பேர்கள் சேர்க்கப்பட்டு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் கல்விசாரா பதவியணியினர் தற்காலிக அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தனர். | |
| (ஆ) | உயர் கல்வியினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் (AHEAD) நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 5,234,000 செலவில் 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப் பட்ட நடமாடும் ஆய்வு கூட பேரூந்து வண்டி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறைவாகப் பயன் படுத்தப்பட்டிருந்தது. | அந்தப் பேரூந்து வண்டி 2023 ஏப்ரல் மாதம் முதல் பல்வேறு அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் / செயலமர்வுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.2. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிரயம் ரூபா 58 மில்லியன் ஆன பல்கலைக்கழகத்தின் 05 பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பான மெடிவுலாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ தகவல் முறைமையில் (OMIS) குறைபாடுகளுடன் காணப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆணடிலிருந்து புதிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (New OMIS) ஸ்தாபிப்பதற்காக ரூபா 48,864,381 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வைரயிலும் புதிய முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | இந்த New OMIS முறைமை தற்காலிகமாக நாளதுவரையாக்கப்பட்டு குறுங்கால பாடநெறிகளுக்காக இணையவழி ஊடாக விண்ணப்பங்களை கையேற்றல் மற்றும் பதிவு செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஆரம்ப தரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் பரிசோதனைகள் (Quality Assurance and Testing) நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | முகாமைத்துவத் தகவல் முறைமையை விரைவாக ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |